## நமீபியா



# தேவனை அறிய வேண்டும்

*அந்தக் கூட்டங்களின் முடிவில் மூன்று பேர் தேவனை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.*

நமீபியா காடுகளில் ஹிம்பா என்கிற இனமக்கள் வாழ்கிறார்கள்; இவர்கள் பகுதியளவு நாடோடிகள். அதாவது, நீண்டகாலம் நீடிக்கிற வெயில் காலத்தில் தங்கள் கால் நடைகளை மேய்ப்பதற்காக தண்ணீர் இருக்கிற இடங்களுக்கு இடம்பெயர்ந்துகொண்டே இருப்பார்கள். மழைக்காலம் குறைவாகவே இருக்கும்; அப்போது இரண்டு மூன்று குடிகல்களுடன் அமைந்துள்ள தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி, மக்காச்சோளம் போன்ற பயிர்களைப் பயிரிடுவார்கள். அது அந்த வருடம் முழுவதும் அவர்களது உணவுத் தேவைக்குப் போதுமானதாக இருக்கும்.

கஷூவகூவுக்கு 24 வயது; மூன்று பிள்ளைகளுக்கு தாய். 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதியின் உதவியால் நடத்தப்பட்ட சுவிசேஷக்கூட்டத்தில்தான் அவர் முதன்முதலாக தேவனைப்பற்றிக் கேள்விப்பட்டார். அவரது சம்பவம் இதோ.

அடர்ந்த நமீபியக் காடுகளில் முன்பின் தெரியாத ஒருவர் தங்கள் பகுதிக்கு வந்திருந்ததைக் கண்டு கஷூவகூ ஆச்சரியமடைந்தார். அதற்குமுன் அவரைப் பார்த்தது இல்லை, இதற்குமுன் தான் சென்றிராத ஓர் இடத்திற்கு வரும்படி அந்த மனிதர் அழைத்தார். அதாவது ஆலயத்திற்கு அழைத்தார்.

அந்த அழைப்பு கஷூவகூவுக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

தன் குடிசையிலிருந்து 15 நிமிட நடைபயணத் தூரத்திலிருந்த ஒரு மரத்தடியில் வைத்துதான் கூட்டம் நடைபெற்றது, அங்கு சென்றாள்.

மற்றக் குடிசைகளிலிருந்தும் பெண்களும் சிறுவர்களும் வந்திருந்தார்கள்.அந்த மரத்திலிருந்து 15 நிமிட நடைபயணத் தூரத்தில் அவர்

கள் வசிக்கிற பகுதியில் சுமார் 15 குடிசைகள் இருக்கும். கஷுவெகூவுக்கு அந்த ஆராதனை ஒரு புதிய அனுபவமாக இருந்தது. போதகர் பாடல்கள் சொல்லிக்கொடுத்தார், பிரசங்கம்பண்ணினார். பாடல்கள் புதிதாக இருந்ததால், கஷுவெகூவுக்குக் கற்றுக்கொள்ள கடினமாக இருந்தது. அவர்கள் யாரைப்பற்றிப் பாடினார்களோ அவரைப்பற்றி இதற்குமுன் அவள் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால் பாடல்கள் பிடித்திருந்தன. அந்தப் பாடல்கள் மக்களுடைய தேவைகளை எல்லாம் சந்திக்கிற ஒரு தேவனைப்பற்றியதாக இருந்தன.

மனந்திரும்புதல்பற்றிப் பிரசங்கம்பண்ணினார். போதகர் பிரசங்கம்பண்ணி முடிக்கிற வேளையில், தான் மனந்திரும்பினால்தான் தேவன் தன்னை இரட்சிக்கமுடியும் என்பதைகஷுவெகூபுரிந்துகொள்ள ஆரம்பித்திருந்தாள்.

ஓய்வுநாட்களில் அந்தப் போதகர் வந்தபோதெல்லாம் அந்த மரத்தடியில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துகொண்டாள். பிறகு அந்தப் போதகர் நமீபியாவின் வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டார்; அதன் பிறகு ஒரு வேதாகமப் பணியாளர் மாதம் இருமுறை வந்து அந்த மரத்தடியில் வைத்து கூட்டங்கள் நடத்தினார். அவர் வந்தபோதெல்லாம் கஷுவெகூ அங்கு சென்றாள். அந்தப் பணியாளர் அங்கு ஒரு ஆவிக்குரிய கூட்டம் நடத்தியபோதும், தினமும் அதில் கலந்துகொண்டாள். பிறகு, இரண்டு வார சுவிசேஷக்கூட்டங்கள் நடத்தியபோதும், தினமும் கலந்துகொண்டாள். பிறகு அவர் ஒரு ஒளிப்பெருக்கியும், மின்னாக்கியும் கொண்டுவந்து, வண்ணப் படங்களுடன்ஜீவனுள்ளதேவனைப் பற்றிப் பேசினார். பிறகு, தேவனுடன்நித்தியமாகநாம்வாழப்போவதையும்குறித்துச் சொன்னார். கஷுவெகூவுக்கு எல்லாமே பிடித்திருந்தன.

அந்தக் கூட்டங்களின் முடிவில் மூன்று பேர் தேவனை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆனால் கஷுவெகூ அதற்கு முன்வரவில்லை. பிறகு அந்தப் பணியாளர், வண்டி ஒன்றை ஏற்பாடு செய்து, ஞானஸ்நானம் பெற்ற அந்த மூன்று நபர்களையும், அவர்களது நண்பர்களையும் பக்கத்து நகரத்திலிருந்த அட்வென்ட்டிஸ்ட் சபைக்கு அழைத்துச் சென்றார். வண்டியில்லாவிட்டால், ஒற்றையடி பாதையில் ஏழு மணி நேரம் நடக்க வேண்டும். ஆனால் அப்போதும் கஷுவெகூ செல்லவில்லை. ஏனென்றால், அவள் தன் குடும்பத்தின் பசுக்களைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. அது அவளுடைய கட்டாய வேலை. பசுக்களைக் கவனிக்காமல் விட்டால், அது தன் குடும்பத்தை அவமதித்ததுபோலாகும்.

ஆனால் என்றாவது ஒரு கஷுவெகூ ஞானஸ்நானம் எடுக்க விரும்புகிறாள். அதற்கு தான் ஆயத்தமாக இருப்பதாகவும் உணருகிறாள். தன் முழு இருதயத்தோடும் தேவன்மீது அன்புகூருகிறாள்.

“தேவன் என்னுடைய இரட்சகராகவும் என் தேவைகளைச் சந்திப்பவராகவும் இருக்கிறார்.

நான் கேட்கிற எதையும் அவரால் கொடுக்கமுடியும்'' என்று சொன்னாள்.

தூங்கச்செல்லும்போதும், விழிக்கிறபோதும், ஜெபிக்கிற பழக்கம் அவளுக்கு உண்டு. சுருக்கமாகவே ஜெபிப்பாள். 'தேவனே, எனக்கு உதவிசெய்யும்' என்று மட்டுமே சொல்லுவாள்.

எல்லாவற்றிற்கும் மேலாக தேவனைப்பற்றி அதிகமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறாள். பெரும்பாலானஹிம்பாஇனத்தவர்களைப் போல, வாசிக்கவும் கற்றுக்கொண்டாள். ஆனாலும் அவளிடம் வேதாகமம் கிடையாது. அவளுடைய மொழியில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது.

நமீபியாவில் ஹிம்பா மக்கள் மத்தியில் சபை செய்துவருகிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் உதவியால்தான் ஹிம்பா மக்களுக்கு சுவிசேஷம் சொல்கிற ஒரு ஊழியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறுதான் அந்தப் போதகதர் கஷுவகூவின் வீட்டிற்குச் சென்றார். அந்தக் காணிக்கையின் உதவி கஷுவகூவின் குடும்பத்திலும், அந்த இனத்தவரிலும் இன்று வரை உணரப்படுவது போல, இந்தக் காலாண்டில் நீங்கள் கொடுக்கப்போகிற பதின்மூன்றாம் வாரக் காணிக்கையும்கூடய, தேவனுடைய ஆசீர்வாதத்தால் நமீபியாவிலும் அதற்கு அப்பாலும் ஒரு நீண்ட, நீடித்த தாக்கத்தை உண்டாக்கப்போகிறது. செப்டம்பர் 27ம் தேதி தாராளமாகக் கொடுங்கள்.

---

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் நமீபியாவைக் காட்டுங்கள். பிறகு, கஷுவகூவின் குடிசைப் பகுதிக்கு அருகிலுள்ள நகரமான, அட்வென்ட்டிஸ்ட் சபை அமைந்திருக்கிற ஓபுவோ நகரத்தைக் காட்டுங்கள்.
- கஷுவகூவின் ஒரு சிறிய காணொளியை யூடியூபில் காண்பதற்கு: bit.ly/Kazuvakua-SID.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/sid-2025.
- கஷுவகூ போன்ற ஹிம்பா இனத்தவர்கள் ஓட்ஜிஹெரேரோ என்கிற மொழியைப் பேசுகிறார்கள். பொருளாதார காரணங்கள் போன்ற பிற காரணங்களுக்காக அவர்களுடைய தாய்மொழியில் வேதாகமங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின் வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, 'தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்'.